## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 78/2022

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 | நாள் | 18.12.2023 |
| பெயர் | வாசுதேவன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(எதிரிகள் இருவரும் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் தற்போது மூவலூர் தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை பார்த்து வருகிறேன். இறந்துபோன வைத்தியநாதசுவாமியை தெரியும். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வைத்தியநாதசுவாமியை ஆஜர் எதிரிகள் கொன்றுவிட்டதாக ஒருவருடத்திற்கு முன்னதாக கேள்விபட்டேன். எனக்கு நேரடியாக தெரியாது.மறுநாள் தான் தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்யவும் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், அவர்கள் விசாரித்தபோது கடந்த 26.11.2021 ம் தேதி மதியம் 02.30 மணிக்கு மூவலூர் பேருந்து நிலையத்தில் வேலு டைலர் கடை முன்பு எதிரிகள் இருவரும் வைத்தியநாத சுவாமிடம் மதுபோதையில் சண்டைபோட்டு கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தினேஷ் வைத்தியநாதசுவாமியை பின்புறமாக பிடித்துகொள்ள திவாகர் மர ரிப்பரை எடுத்து திவார்கள் தலையில் அடித்தார் என்றும், இதனை பார்த்த பெருமாள் மற்றும் பாலமுருகன் மற்றும் நானும் பதறிபோய் சத்தம்போட பெருமாள் அதை தடுக்க முயன்றார் என்றும், காயம்பட்ட வைத்தியநாத சுவாமி 14 நம்பர் பேருந்தில் ஏறி

மயிலாடுதுறை போய்விட்டார் என்றும், அங்கு மருத்துவமனையில் சேர்ந்த வைத்தியநாதசுவாமி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள் என்றால் சரிதான். எனவே எதிரிகளுக்கு பயந்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 78/2022

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 5 | நாள் | 18.12.2023 |
| பெயர் | பூவழகி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(எதிரிகள் இருவரும் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் தற்போது மூவலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஸ்டாப் நர்சாக உள்ளேன். இறந்தபோன வைத்தியநாதசுவாமி என் கணவர். அசா1 என் மாமியார். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். எனக்கு சொந்தஊர் கோவில் கந்தன்குடி. கடந்த 2018 ல் இறந்துபோன வைத்தியநாதசுவாமியுடன் திருமணமாகி, நான் மூவலூர் தெருவில் குடியிருந்தேன். நான் தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணியாற்றினேன். என் மாமனாரின் சகோதரர் மூர்த்திக்கு இரண்டு மனைவிகள். இரண்டாவது தாரத்து மகன்கள் என் வீட்டு இடது பக்கம் வசித்து வந்தார்கள். முதல் தாரத்தின் மகன்கள் என் வீட்டின் வராட்டாவில் தங்கி கொண்டு புழங்கி வந்தார்கள். திருமணத்திற்கு பிறகு அவர்கள் இருவரையும் என் வீட்டுக்காரர் வராண்டாவில் தங்க கூடாது என்றார். ஆஜர் எதிரிகள் இருவரும் எனக்கும் இந்த வீட்டில் பங்கு உண்டு. ஆகையால் போகமுடியாது என்று கூறுவார்கள். குடித்துவிட்டு வந்து இருவரும் வராண்டாவில் படுத்துகிடப்பார்கள். அது என் வீட்டுக்காரருக்கு பிடிக்காது. அசா1 மல்லிகா இதுபோன்று சண்டை போடாதீர்கள் என்று கூறுவார். கடந்த 25.11.2021 தேதியன்று சுமார் இரவு 09.00 மணியளவில் என் வீட்டுக்காரர் எதிரிகள் தகராறு செய்கிறார்கள் என்று கூறினார். அதற்கு நான் அத்தையிடம் கூறுங்கள் அவர் கண்டித்து அனுப்புவார் என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டேன். அப்போது என் அம்மாவீட்டில் இருந்ததால் மீண்டும் நான் போன் எதுவும் செய்யவில்லை. நான்

26.11.2021 தேதி மாலை 06.00 மணிக்கு என் கணவருக்கு போன் செய்தபோது அவர் அழைப்பை எடுக்கவில்லை. அன்று இரவு 09.00 மணியளவில் என் வீட்டுக்கு அருகில் இருக்கும் ராஜா என்பவர் எனக்கு போன் செய்து அன்று மதியம் 01.30 மணியளவில் கடைத்தெருவில் ஆஜர் எதிரிகள் இருவரும் என் வீட்டுக்காரரை கட்டையால் அடித்ததாகவும், அதன் காரணமாக அவர் இறந்துவிட்டார் எனவும் கூறினார். உடனடியாக கார் மூலம் மூவலூருக்கு வந்து அத்தையிடம் தகவல் கேட்டேன். அவர் நடந்த விவரத்தை சொன்னார். இரவு முழுவதும் மழையாக இருந்தது. கைகுழந்தையுடன் நான் எங்கும் செல்லமுடியவில்லை. மறுநாள் காலை என் அத்தையுடன் குத்தாலம் காவல் நிலையம் சென்று என் அத்தை புகார் கொடுத்தார். பின்னர் மூவலூர் வந்து வேலு டைலர் கடை அருகே நான் விசாரித்தபோது என் கணவரை தினேஷ் பிடித்து திவாகர் தலையில் அடித்ததாகவும், அந்த காயம் காரணமாக இறந்ததாகவும் தெரிந்து கொண்டேன். பிறகு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வந்து ஆய்வாளர் அவர்கள் நடத்திய பிரேத விசாரணையில் போது என் கணவரை அடையாளம் காட்டி கையொப்பம் இட்டேன். போலிசாரிடம் நடந்த விவரங்களை கூறினேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் பிரவத்திற்கு பிறகு வீட்டிற்கு திரும்பவில்லை என்ற அசா1 போலிசார் விசாரணையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். ஓராண்டாக நான் வீட்டிற்கு செல்லவில்லை. என் கணவருக்கு குடிபழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று என் கணவர் மது அருந்திரா இல்லை என்று என் மாமியார் எதுவும் கூறவில்லை. என் மாமியார் கொடுத்த புகாரை நான் படித்தேன். அதில் அவர் குடித்திருந்தரா என்று கூறியிருக்கிறாரா என்று ஞாபகம் இல்லை. பிரேத பரிசோதனை அறிக்கையில் என் கணவர் இறக்கும் போது மது அருந்திய நிலையில் இருப்பதாக கூறப்பட்டிருந்தது என்றால் சரிதான். என் கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து வீண்தகராறு செய்து வந்ததால் நான் கோபித்துவிட்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் யாரிடம் சென்று விசாரித்தேன் என்று கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். நான் அன்றைய தினம் ஊருக்கு திரும்ப இல்லை என்றும் , சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் போலிசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் மதுபோதையில் விழுந்து

ஏற்பட்ட காயங்களில் பின்தொடர்ச்சியால் இறந்துபோனார் என்றும் எதிரிகள் மீது இருந்த விரோதத்தால் எதிரிகளுக்கு எதிராக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் கணவரை பிடித்து கொண்டு கட்டையால் அடித்தாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.